மாலை பதிப்பு
# சுபீட்சம்
சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
13.08.2022 சனிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரை பிரதமராக்கலாம்



அமைச்சரவையை வரையறுத்து பிரதமர் உள்ளிட்ட முக்கிய பதவிகளை தமிழர், முஸ்லிம்கள் இடையே பகிர்ந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் சர்வதேசத்திற்கு சிறந்த செய்தியொன்றை கூற முடியும் என ஆளும் கட்சி உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (12) மூன்றாவது நாளாக இடம்பெற்ற ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் கொள்கை உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு

02



அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்ற போது..

# ஹோட்டல் அறையை விட்டு வெளியேற வேண்டாம்

## தாய்லாந்து பாதுகாப்பு தரப்பினர் கோட்டாவிற்கு அறிவிப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை ஹோட்டலிற்குள்ளேயே இருக்குமாறு தாய்லாந்து அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். இலங்கையின் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி தாய்லாந்திற்கு வந்துள்ளதை பலர் எதிர்க்கின்ற அதேவேளை அவர் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காகஅவரை ஹோட்டலிற்குள்ளேயே இருக்குமாறுதாய்லாந்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். முதலில் புக்கெட்டில் தரையிறங்க தீர்மானித்திருந்த விமானத்தின் பயணப்பாதை மாற்றப்பட்டதை தொடர்ந்து அவர் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு தாய்லாந்தின் தலைநகரிற்கு வந்து சேர்ந்தார். தகவல் கசியக்கூடும் என்ற அச்சம் காரணமாக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விமானம் – (இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி உட்பட நால்வர்மாத்திரமே அதில் காணப்பட்டனர் )புக்கெட்டில் தரையிறங்காமல் பாங்கொக்கில் உள்ள விமானநிலையத்திற்கு சென்றது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்கும்

# வழிகாட்டுதல்களை கடைபிடிக்காத எரிபொருள் நிலையங்களுக்கு நடவடிக்கை

வழிகாட்டுதல்களை கடைபிடிக்காத எரிபொருள் நிலையங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். எரிபொருள் விநியோகம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் இன்று காலை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவ முனையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.. இதன்போது, ஒவ்வொரு எரிபொருள் நிலையத்திற்கும் விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவு மற்றும் **QR** அமைப்புடன் வழங்கப்படும் எரிபொருளின் அளவு பற்றிய தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பாப்பரசரிடமிருந்து 4 கோடி ரூபா நிதியுதவி



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 100,000 யூரோ வழங்க பரிசுத்த பாப்பரசர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இலங்கை பெறுமதியில் சுமார் 400 இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகையை 3 பகுதிகளாகப் பிரித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்க கொழும்பு பேராயர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

# நாட்டில் வேலையின்மை 4.3வீதமாக குறைந்தது

இலங்கையின் வேலையின்மை வீதம் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 4.3 சதவீதமாக குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டை போன்றே 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலும் வேலையின்மை வீதம் 5.7 சதவீதமாக இருந்ததாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. புள்ளிவிபர திணைக்களத்தின் தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டில் 373,272 தனிநபர்கள் வேலையில்லாமல் உள்ளனர். இது பொருளாதார ரீதியாக இயங்கும் மக்கள் தொகையில் 4.3 சதவீதமாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையில் பொருளாதார ரீதியாக இயங்குவோர் தொகை 8,761,803 ஆக இருந்தது. அதில் 64.6 வீதம் ஆண்களும், 35.4 வீதமானவர்கள், பெண்களுமாவர். பொருளாதார ரீதியில் இயங்கும் மக்கள் தொகையில், 4,884,513 க்கும் அதிகமானோர் பணியாளர்களாகவும், 226,907 பேர் முதலாளிகளாகவும், 2,804,934 பேர் சொந்த தொழில்புரிபவர்களாகவும், 472,176 பேர் குடும்பப் பணியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். இலங்கை சனத்தொகையில் 1,253,145 பேர் அரச துறையில் பணியாற்றுவதாக அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# 5நாட்களும் பாடசாலை

அரசாங்க மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் வரும் திங்கள் (15) முதல் வாரத்தில் ஐந்து நாட்களும் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை வழக்கமான அட்டவணைப்படி செயல்படும் என கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி செயலாளர்களுடன் இன்று (13) இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். போக்குவரத்து சிரமங்கள் உள்ள பகுதிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அதிபர்களுக்கான போக்குவரத்து வசதிகளை உறுதி செய்யுமாறு மாகாண அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை மாத்திரம் நடாத்துமாறும், பாடசாலைக்குப் பின்னர் சுற்றுவட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# திருகோணமலையில் இருந்து 04 பேர் தமிழகத்தில் தஞ்சம்

**(வடமலை ராஜ்குமார்)**

திருகோணமலை சல்லியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இன்று ( 13) தமிழகம் ராமேஸ்வரத்தில் தஞ்சம், மண்டபம் காவல் நிலையத்தில் வைத்து மரைன் போலீசார் விசாரணை கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாசி பொருட்கலான பால், அரிசி, காய்கறி, பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பொருட்கள் கிடைக்காமல் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்ற நிலையில், மக்கள் அயல் நாடுகளான இந்தியா, ஆஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்து வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் ஏற்கனவே இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகத்தில் 130 நபர்கள் தஞ்சம் அடைந்துள்ள நிலையில் அதில் ஒரு மூதாட்டி பரிதாபமாக உயிரிழந்தார். இந்த நிலையில் மேலும் அகதிகளாக ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 நபர்கள் ராமேஸ்வரம் துறைமுகத்தில் படகு மூலம் வந்து தஞ்சம் அடைந்தனர்

# கிளைபோசேட் இறக்குமதியை அனுமதிக்கும் அதிவிசேட வர்த்தமானி

கிளைபோசேட் இறக்குமதியை அனுமதிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பூச்சிக்கொல்லிகள் பதிவாளரின் பரிந்துரையின் பேரில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகம் வழங்கிய உரிமத்தின் கீழ் கிளைபோசேட் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு களைக்கொல்லி இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டபோதும், தேயிலை மற்றும் இறப்பருக்கு கிளைபோசேட் பயன்பாடு மூன்று ஆண்டுகளுக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் மலர் வளர்ப்புத் தொழிலில் நோய் நீக்கம் மற்றும் நோயுற்ற கரும்புச் செடிகள் மற்றும் தென்னை மரங்களின் இலைவாடல் நோயை அகற்றுவதற்காக கட்டுப்பாட்டு அளவில் கிளைபோசெட்டை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் 100 மூ இயற்கை விவசாயத்திற்கு செல்ல அரசாங்கம் கொள்கை முடிவை எடுத்ததால் 2021 ஆம் ஆண்டில் கிளைபோசெட் மீண்டும் தடை செய்யப்பட்டது. இதனையடுத்து, களைகொல்லியான கிளைபோசெட் மீதான இறக்குமதித் தடை கடந்த 5 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு வாரத்தில் 5 நாட்களும் பணி?

அரச ஊழியர்களை வாரத்தில் 5 நாட்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு, அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது கட்டுப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்கு தணிக்கப்பட்டு, பொது சேவைகள் இயங்கி வருவதால், வாரத்தின் ஒவ்வொரு வேலை நாட்களிலும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் வழமை போன்று

02

# வெளிநாட்டு வருமானத்தில் வீழ்ச்சி



ஜூலை 2022 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு வருமானம் 279.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 2022 ஜனவரி முதல் ஜூலை வரை, வெளிநாட்டுப் பணியாளர்கள் பெற்ற வெளிநாட்டு வருமானம் 1889.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் (3777.6 அமெரிக்க டொலர்கள்) ஒப்பிடுகையில் இது 50வீதம் குறைவு என இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

## ஹோட்டல் அறையை விட்டு வெளியேற வேண்டாம்

பிரிவினர் அவரை அங்கு சந்தித்தனர் அவருக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவில் தாய்லாந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் உள்ளனர். பாதுகாப்பு கரிசனை காரணமாக அவர் தங்கியிருக்கும் ஹோட்டலின் பெயர் இடம் குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை. சீருடை அணிந்தவர்களிற்கு பதில் விசேட பிரிவை சேர்ந்த சீருடை அணியாதவர்கள் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்பளிக்கின்றனர். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி தாய்லாந்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர் ஹோட்டலிற்குள்ளேயே இருக்கவேண்டும் என அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கோத்தபாய ராஜபக்ச தாய்லாந்திற்கு வருவதற்கு முதல் நாள் தாய்லாந்தின் பிரதமர் பிரயூத் சான் ஓசா கருத்து தெரிவிக்கையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிஏனையவர்கள் கவனத்தை அதிகளவு ஈர்க்காத விதத்தில் தங்கியிருக்கவேண்டும் என தெரிவித்திருந்தார்.இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி தாய்லாந்தில் அவ்வாறான விதத்திலேயே தங்கியிருப்பார்.

## சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரை பிரதமராக்கலாம்

உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நான் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது டலஸ் அழகப்பெருமவுக்கே ஆதரவளித்தேன். அதற்கு காரணம் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று பலரும் விடுத்த கோரிக்கையே ஆகும். சஜித் பிரேமதாசவே அவரின் பெயரை பரிந்துரைத்திருந்தார். அதற்கு முதல்நாள் வரையில் டலஸ் அழகப்பெருமவுக்கே பெரும்பான்மையானவர்கள் ஆதரவளிக்க தீர்மானித்திருந்தனர். 90 வீதமானவர்கள் அந்தத் தீர்மானித்திலேயே இருந்தனர். இதன்படியே நான் வாக்களித்தேன். இதற்கு முன்னர் ஜனாதிபதிகள் பலரின் சிம்மாசன உரைகளை கேட்டுள்ளோம். அவர்கள் சட்டப்பூர்வமாக தெரிவாகிய ஜனாதிபதிகளாகும். ஆனால் அண்மையில் வேறு முறையில் அரசியலமைப்பு ரீதியில் வந்ததாகக்கூறப்படும்ஜனாதிபதியின்உரையை கேட்டோம். அவர் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சர்வதேசத்திற்கு சிறந்த செய்தியொன்றை கூற முடியும். அமைச்சரவையை வரையறுத்து பிரதான பதவிகளை மற்றைய இனத்தவர்களிடையே பகிர்ந்துகொள்ளலாம். சிங்களவர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் தமிழர் ஒருவரை பிரதமராக்கலாம். ஏன் முடியாது. அமெரிக்காவில் கறுப்பினத்தை சேர்ந்த பராக் ஒபாமாவுக்கு ஜனாதிபதியாக முடியுமென்றால் இங்கே தமிழ் பேசும் ஒருவர் பிரதமராகினால் என்ன? முஸ்லிம் ஒருவர் இங்கே சபாநாயகராகினால் என்ன? இதன்மூலம் இனவாத மனநிலையில் இருந்து விடுபட்டுள்ளோம் என்று சர்வதேசத்திற்கு கூற முடியுமாக இருக்கும். புரட்சிகரமான இனவாதம் அற்ற போராட்டக்காரர்கள் கேட்ட வரையறுக்கப்பட்ட அமைச்சரவையை அமையுங்கள். இதனை செய்து சிறந்த செய்தியை சர்வதேசத்திற்கு காட்டுங்கள். அதனை தொடர்ந்து அனைத்து எம். பிக்களையும் உள்ளடக்கி துறைசார் மேற்பார்வை குழுக்களை அமையுங்கள் என தெரிவித்தார்.

## அரச ஊழியர்களுக்கு வாரத்தில் 5 நாட்களும் பணி?

அரச அலுவலகங்களுக்கு வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இதன்படி, அரச அலுவலகங்களின் பணிகளை வழமை போன்று நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், காலதாமதத்தை குறைக்கும் வகையில், அரசாங்க ஊழியர்களை வாரத்தில் ஐந்து நாட்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு கடந்த ஜுலை 24ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்திற்கு அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பதை கட்டுப்படுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இதன்படி, குறித்த கால அவகாசம் முடிவடைந்ததன் பின்னர், நாட்டின் நிலைமையை கருத்திற் கொண்டு வாரத்தின் ஐந்து நாட்களிலும் அரச ஊழியர்களை பணிக்கு அழைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்திலான கடமை தேவைகளை கருத்தில் கொண்டு வாரத்தின் ஐந்து நாட்களும் பணிபுரிய உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ் விவசாயிகளுக்கு டீசல் வழங்க நடவடிக்கை



த.சுபேசன்

யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஆடி உழவினை உழுது வயல் நிலங்களை தயார்ப்படுத்துவதற்கு தேவையான டீசலை உடன் வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் துறைசார் அமைச்சர்களிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக 13ஃ08 சனிக்கிழமை தொடக்கம் உழவுக்கான டீசல் வழங்கி வைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கருத்து தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் 2022ஃ23 காலபோக செய்கைக்கு 32,720 ஏக்கர் வயல் நிலங்கள் தயாராக உள்ளன.குறித்த வயல் நிலங்கள் உழுது தயார்ப்படுத்த 261,760 லீட்டர் டீசல் அவசர தேவைப்பாடாக இருந்தது.இது தொடர்பாக உரிய திணைக்களங்கள் மற்றும் விவசாயிகள் எனது கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் நான் இது தொடர்பாக உடனடியாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தேன்.இதனையடுத்து யாழ் மாவட்ட விவசாயிகளின் தேவைக்காக 264,000 லீட்டர் டீசல் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கான டீசல் 13ஃ08 சனிக்கிழமை தொடக்கம் கட்டைவேலி, சுன்னாகம்,பண்டத்தரிப்பு, சங்கானை, கொடிகாமம்,கைதடி மற்றும் வேலணை ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கமநலசேவை நிலையத்தினரின் கண்காணிப்பில் விநியோகிக்கப்படவுள்ளது. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## வீரமுனை படுகொலை நினைவேந்தல்
# சோகத்தோடு அனுஷ்டிப்பு



(ரக்ஸனா)

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதி வீரமுனையில் இடம் பெற்ற மிலேச்சத்தனமான கொடூரமான படுகொலை தினத்தின் 32 வது வருட நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை(12) வீரமுனையில் இடம்பெற்றது. இனத்தின் புனித தலமான ஆலயத்திற்குள் புகுந்து ராணுவத்தினரும், இன்னும் பல காடையர்களும் நடத்திய இனவெறி வேட்டையிலேயே 55 பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

அவர்களை ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக அனுஸ்ட்டிக்கப்பட்டு வரப்படுகின்றன. இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம் மன்னிக்கவும் மாட்டோம் எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்புவதும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நடத்தி வருகின்றோம். என இதன் போது கலந்து கொண்டவர்கள் வித்தனர். இதன்போது மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# நீதிமன்றத்தை ஏமாற்றி கணவனிடம் பணம் பெற்றவர் சிக்கிக் கொண்டார்

( வாஸ் கூஞ்ஞ)

நீதிமன்றத்தை ஏமாற்றி மூன்று பிள்ளைகளின் தாயார் நீண்ட காலமாக கணவனிடம் தாபரிப்பு பணம் பெற்று வந்ததை நீதிமன்றில் கணவனின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து கணவனிடம் பெறப்பட்ட தாபரிப்பு பணத்தை மீளச் செலுத்துவதற்கான நிலை மனைவிக்கு ஏற்பட்ட நிலை மன்னார் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றுள்ளது. வெள்ளிக்கிழமை (12.08.2022) மன்னார் நீதவான் நீதிமன்றில் நீண்டகால தாபரிப்பு வழக்கு ஒன்று மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கானது மன்னார் நகர சபை எல்லைக்குள் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாய்க்கும் இவரின் கணவருக்குமிடையே குடும்ப பிரிவினால் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் 2001ம் ஆண்டளவில் தனக்கும் தன்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் தாபரிப்பு பணம் அல்லது பராமரிப்பு பணம் கோரி கணவனுக்கு எதிராக மனைவி தாபரிப்பு வழக்கினை தாக்கல் செய்திருந்தார். குறித்த பெண் இவ்வழக்கினை தாக்கல் செய்த பொழுது இவ் பெண் வேறு ஒரு ஆணுடன் சோர வாழ்க்கை வாழ்ந்து வந்ததுடன் அவ் சோர வாழ்க்கை காரணமாக ஒரு ஆண் குழந்தையும் பெற்றெடுத்துள்ளார்.

அன்று தொடக்கம் இன்று வரை இவ் பெண் கணவனிடமிருந்து தனக்கும் தன்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் தாபரிப்பு பணத்தை நீதிமன்றத்தின் ஊடாக பெற்று வந்துள்ளார். ஆனால் இவ் பெண் வேறொரு ஆணுடன் சோர வாழ்க்கை வாழ்ந்து இதன் மூலம் ஒரு ஆண் குழந்தை பெற்றெடுத்ததை நீதிமன்றுக்கு மறைத்த நிலையிலேயே இவ் தாபரிப்பு பணத்தை பெற்று வந்தள்ளார்.

அத்துடன் தாபரிப்பு பணத்தை பெற்றுவந்த பிள்ளைகள் 2018ம் ஆண்டு காலப்பகுதியிலேயே 18 வயதினை பூர்த்தி செய்தவர்களாகவும் இவ் மூன்று பிள்ளைகள் திருமணமும் முடித்துவிட்டார்கள் எனவும் மன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. ஆனால் தாபரிப்புச் சட்டத்தின் இறுக்கத்தன்மையினை குறித்த பெண் தனக்கு சாதகமாக பயன்படுத்தி பணம் செலுத்தப்படாவிட்டால் சிறை தண்டனை கிடைக்குமென குறித்த கணவரை அச்சுறுத்தி மாதாந்தம் தாபரிப்பு பணத்தினை பெற்று வந்துள்ளார் ஆனால் கடந்த தவணையின்போது கணவனுக்காக மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி எஸ்.டினேஷ் குறித்த பெண் தாபரிப்பு பணத்தினை பெற உரித்துடையவர் அல்ல எனக்கூறி வழக்கினை விசாரணைக்கு எடுக்குமாறு மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார். இதன் அடிப்படையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டபோது பெண்ணிடம் சட்டத்தரணி டினேஷ் குறுக்கு விசாரனை செய்தபோது நீங்கள் கடந்த 20 வருடங்களாக இன்னொரு ஆணுடன் வாழ்ந்து வருகின்றீர்கள் என கேட்டபொழுது அது பொய் எனவும் தான் 19 வருடங்களாகவே வாழ்ந்து வருகின்றோம் என அவ் பெண் தெரிவித்ததுடன் தனக்கு செலுத்த வேண்டிய நிலுவைப்பணம் 79 ஆயிரம் ரூபா பணத்தினை பெற்று தருமாறு மன்றில் கோரியிருந்தார்.

விசாரணையின் பின்னர் குறித்த வழக்கானது இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (12.08.2022) இவ் வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி நிரஞ்சினி முரளிதரன் முன்னிலையில் கட்டளைக்காக நியமிக்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட கட்டளையில் குறித்த பெண்ணே இன்னொரு ஆணுடன் வாழ்ந்து வருவதை ஏற்றுக்கொண்டதாகவும் சோர வாழ்க்கை வாழும் பெண் தாபரிப்பு பணத்திற்கு உரித்துடையவர் அல்ல என்றும் பிள்ளைகள் 18 வயது நிரம்பியவர்கள் என்ற அடிப்படையில் பிள்ளைகளுக்கு பிரதிவாதி தாபரிப்பு பணம் செலுத்த வேண்டிய தேவையில்லையென்றும் குறித்த பெண் நீதிமன்றை தவறாக வழிநடாத்தியே தாபரிப்பு பணத்தினை பெற்று வந்துள்ளார் என்பது தெளிவாகின்றது எனக் கூறிய நீதவான் அவர்கள் பிரதிவாதி செலுத்த வேண்டிய 79 ஆயிரம் ரூபா நிலுவை பணத்தினை செலுத்த தேவையில்லையென்றும்

விண்ணப்பதாரி (பெண்) மேலதிகமாக பெற்ற 65 ஆயிரம் ரூபா பணத்தினை குறித்த கணவருக்கு மீளவும் செலுத்துமாறும் கட்டளை பிறப்பித்தார். நீதவான் அவர்கள் 65 ஆயிரம் ரூபா பணத்தினை வேண்டி தருவதா என வினவ குறித்த கணவர் அந்த பணம் தனக்கு வேண்டாம் என கூற குறித்த வழக்கானது இன்று முடிவுறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நுணாவில் ஐ.ஓ.சியில் தனியார் பேருந்துகள்,டிப்பர்களுக்கு முன்னுரிமை



த.சுபேசன்

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 13ஃ08 சனிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச தனியார் பேருந்துகள் மற்றும் டிப்பர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் டீசல் விநியோகிக்கப்பட்டது. கியூ.ஆர் முறைமையின் அடிப்படையில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசாவின் கண்காணிப்பில் எந்தவிதமான சிரமங்களும் இன்றி டீசல் விநியோகிக்கப்பட்டது.அதேவேளையில் மோட்டார் சைக்கிள்களுக்கும் கியூ.ஆர் முறைமை அடிப்படையில் நுணாவில் ஐ.ஓ.சியில் தடையின்றி பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமின்றிய செயல்பாடுகளே, நாடு மீட்சிபெற வழிவகுக்கும்

## ரிஷாட் எம்.பி



சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமின்றி நாட்டை கட்டியெழுப்பும் போதுதான் நாடு பொருளாதாரத்தில் மீட்சிபெறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமா ரிஷாட் பதியுதீன் பாராளுமன்றத்தில் நேற்று (12) தெரிவித்தார். நாட்டை கட்டியெழுப்பும் போதுதான், நாடு பொருளாதாரத்தில் மீட்சிபெறும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பாராளுமன்றத்தில் நேற்று (12) தெரிவித்தார். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய கொள்கைப் பிரகடன உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களோடு நாங்கள் உடன்படுகின்றோம். அவருக்கு கிடைத்துள்ள பதவிக் காலத்துக்குள், இந்த நாட்டிலே நல்ல மாற்றங்களை கொண்டுவருவதன் ஊடாக, பொருளாதார நலனை மையமாக வைத்து முன்னேறக்கூடிய வாய்ப்பு தென்படுகிறது. அதனை அவர் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எனினும், அவருக்கு ஆதரவளித்துக்கொண்டிருக்கும் ஒருசில இனவாத சக்திகள் இந்த பாராளுமன்றத்துக்குள்ளும் இருக்கின்றன. ஆட்சிபீடம் ஏறும் நோக்கில் இனவாதத்தை மூலதனமாகக்கொண்டு, அதனை விதைத்தவர்கள் இங்கு இன்னும் இருக்கின்றனர். எனவே, ஜனாதிபதி மேற்கொள்ளும் நல்ல நடவடிக்கைகளுக்கும் திட்டங்களுக்கும் அவர்கள் அனுமதிப்பார்களா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பேரையும் சமமாகக் கருதி, நல்ல திட்டங்களை முன்வைக்கும் போதுதான் நாடு மேம்பாடு அடையும். குறிப்பாக 19வது திருத்தத்தை 22 வது திருத்தத்தின் ஊடாக கொண்டுவரப் போவதாக தெரிவித்துள்ளார். அவ்வாறான செயற்பாடுகள்தான், இந்த நாட்டின் ஜனநாயகம் மீண்டும் தழைத்தோங்க வழிவகுக்கும். அத்துடன் வெளிநாட்டு உதவிகள் எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

அவரது உரையில் சுட்டிக்காட்டப்பட்ட இன்னொரு விடயம்தான், நமது நாடு பொருளாதார கொள்கையற்ற, வெளிநாட்டுக் கொள்கை இல்லாத நாடாக இருக்கின்றது என்றார். இவற்றை எல்லாம் சரிப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். புத்திஜீவிகளும், பொருளாதார நிபுணர்களும், திறன்படைத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப விருப்பம் கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதி அவர்களை முறையாக பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். இவ்வாறான சிறப்பான விடயங்களுக்கு எமது கட்சியான ‘அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்’ பூரணமாக ஒத்துழைக்கும் என்பதை ஜனாதிபதியிடம் நேரடியாக தெரிவித்துள்ளோம். இப்போது பாராளுமன்றத்திலும் அதனை பகிரங்கமாகக் கூறுகின்றோம்.

முன்னர் இருந்த ஜனாதிபதிக்கு நடந்ததைப் போன்று உலக வரலாற்றில் எவருக்குமே நடந்திராது என்றே நாம் நினைக்கின்றோம். அவர் தேர்தல் மேடைகளிலே இனவாதத்தை மூலதனமாக வைத்து பிரசாரம் செய்தார். அதுமாத்திரமின்றி, பதவிப்பிரமாண உரையிலும், முதலாவது கொள்கைப்பிரகடன உரையிலும் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி, மதவாதத்தையே கக்கினார். சிறுபான்மையினமான முஸ்லிம்களுடன் அவர் நடந்துகொண்ட விதம் மிகவும் மோசமானதாகும். கொவிட் காரணமாக மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்கின்ற போது நாம் அவரிடம் சென்று கெஞ்சினோம். முஸ்லிம் அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், சமூகப் பெரியார்கள் மற்றும் மாற்று மதச் சகோதரர்கள் எல்லோரும் அவரிடம் சென்று மனச்சாட்சியுடன், மனிதாபிமானத்துடன், நியாயமாக நடந்துகொள்ளுமாறு கோரிய போதும் அவர் எதற்கும் செவிசாய்க்கவில்லை. உலக நாடுகளிலே எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாத அக்கிரமச் செயலை அவர் நடாத்தி முடித்தார். எனினும், நாங்கள் ஆகக்கூடிய அழுத்தங்களையும் பிரயத்தனங்களையும் மேற்கொண்டிருந்த போதும், எதனையுமே அவர் கருத்திற்கெடுக்காது, முஸ்லிம்கள் மீது இரக்கம் காட்டாது நடந்துகொண்டார்.

அதுமாத்திரமின்றி, அவரது இரண்டாவது வருடப் பூர்த்தி விழாவின் போது, தன்னை ஒரு பெரிய வீரனாக காட்டுவதற்காக, “கூரகலை ஜெய்லானியையும்”, பொத்துவில் “முகுது விகாரை” பிரதேசங்களையும் தான் விடுவித்துள்ளதாக வீர வசனம் பேசினார். முஸ்லிம்களினால் காலாகாலமாக, பாரம்பரியமாக பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்ட சொத்துக்களையே விடுவித்ததாக உலகுக்கு காட்டி பெருமைபட்டார். அவரது பதவிக்காலத்திலே இனவாதத்தை விதைப்பதிலேயே குறியாக நின்று காலத்தை கடத்தினார். நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லக் கூடிய எந்தவொரு கரிசனையையும் அவர் காட்டவில்லை. 25 இலட்சம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்கினார். தேர்தல் காலத்திலே விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாற்றமாக அசேதனப் பசளையை தடை செய்தார். மீனவ சமூகம் பாதிப்படையக் கூடிய பலவகையான செயற்பாடுகளை முன்னெடுத்தார். அவரது ஆட்சிக் காலத்திலே எந்தவொரு திட்டமிடல் இல்லாமலேயே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. வரிகளை குறைத்தார். பொருளாதார வளர்ச்சிக்கு அவரிடம் எந்தவிதமான கருத்திட்டங்களும் இருக்கவில்லை. ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிடம் உறவைப் பேணுவதில் அவரிடம் தூரநோக்கு இருக்கவில்லை. தான் ஓர் அரசனாக அல்லது மாமன்னனாக விளங்க வேண்டுமென்றமாம் மமதையில், 20வது அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டு வந்து அதனையும் நிறைவேற்றினார். எதிர்க்கட்சியில் இருப்பவர்களை எல்லாம் உடைத்தெடுத்து, அக்கட்சிகளை சிதறடித்து 20வது திருத்தத்தை நிறைவேற்றும் தனது இலக்கை அடைந்தார். அவ்வாறான பலம்பொருந்திய ஜனாதிபதி, தற்போது பட்டுத்திரிகின்றபாட்டை உலகமே பார்த்துக்கொண்டிருக்கின்றது. இருப்பதற்கு இடமில்லை, போவதற்கு போக்கிடம் இல்லை. இதுதான் இப்போதைய நிலை.

ஆகையால், சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதமில்லாமல், இன, மத பேதங்களுக்கு அப்பால் நாட்டை கட்டியெழுப்புகின்றபோது மட்டும்தான் இந்த நாடு முன்னேறும். அதன்மூலமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதற்கு நடந்து முடிந்தவைகள் சான்று. நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாவின் செயல்பாடும், அவருக்கு நடந்தவைகளும் மற்றைய அரசியல் தலைமைகளுக்கு ஒரு பெரிய முன்னுதாரணம். அண்மையில் நாவலப்பிட்டி மற்றும் அக்குரணையில் இடம்பெற்ற வெள்ளத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, தொடர்ச்சியாக இடம்பெறும் இவ்வாறன அனர்த்தங்களை தடுக்க தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஜனாதிபதி உருவாக்க வேண்டும்.

அத்துடன், கடந்த நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்த போது, வடக்கு மீள்குடியேற்றத்துக்கென உருவாக்கப்பட்ட மீள்குடியேற்ற செயலணியின் மூலம் பல அபிவிருத்திகளை மேற்கொண்டோம். ஆனால், கடந்த அரசாங்கம் பதவியேற்றவுடன் அதன் செயற்பாடுகளை முடக்கியது. எனவே, மீள்குடியேற்ற செயலணிக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கி, அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்குமாறும் வேண்டுகின்றோம். அத்துடன், வடக்கையும் தெற்கையும் 100 கிலோமீட்டர் வரையில் சுருக்கும் புத்தளம் மன்னார் பாதையை மீளத் திறக்குமாறும், அதன் மூலம் மக்களின் அன்றாடப் பயணங்களையும் பயன்பாடுகளையும் எளிதாக்கித் தருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சுமார் நான்கு இலட்சம் லீற்றர் வரையில் எரிபொருள் தேவைப்படுகின்றது. அறுவடை நடைபெறும் இக்காலத்தில் சுமார் ஒரு இலட்சம் லீற்றர் வரையில் எரிபொருள் கிடைக்கின்றது. எனவே, அரசு அவர்களுக்கு தேவையான எரிபொருள் வழங்குவதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவ வேண்டும். அதேபோன்று, புத்தளம், முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை உள்ளிட்ட இன்னும் பல மாவட்ட மீனவர்களுக்கு, எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே, விசேட செயற்திட்டம் ஒன்றின் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் நிவர்த்திக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

மேலும், “அரகல” போராட்டக்காரர்களின் விடயத்திலே கண்மூடித்தனமாக செயற்படாமல், ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும். அடாவடித்தனமாக வீடுகளை உடைத்து, சேதங்களை விளைவித்தவர்களுக்கு தண்டனை வழங்குங்கள். ஆனால், ஜனநாயக முறையில் நாட்டுக்காக போராடியவர்களை சின்னஞ்சிறு காரணங்களுக்காக பழிவாங்கி, இன்னுமொரு கலவரம் உண்டாவதற்கு வழிசமைக்க வேண்டாம் என்று வேண்டுகின்றேன். அத்துடன், ஜனாதிபதி தனதுரையில், “இனவாத, மதவாதமற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப செயற்படுவேன்” என்று தெரிவித்திருந்தார். அதனை வரவேற்கின்றோம். அதேபோன்று, “ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்ற செயலணியின் அறிக்கையை நடைமுறைப்படுத்தமாட்டேன்” என்று ஜனாதிபதி எமக்கு உறுதியளித்திருக்கிறார். அவருக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.” என்று கூறினார்.

# பளுதூக்கலில் சாதனை படைத்த இளைஞனுக்கு பாராட்டு விழா



த.சுபேசன்

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் புதிய சாதனை படைத்த சாவகச்சேரியைச் சேர்ந்த ச.புசாந்தனுக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் 13ஃ08 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் பாராட்டு விழா இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வானது திருமதி ச.உதயச்சந்திரிக்காவின் மங்கல விளக்கேற்றல் மற்றும் திருமதி க.மஞ்சுளாவின் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கவுள்ளது.

நிகழ்வில் தென்மராட்சி இலக்கிய அணியின் போசகர்களான வைத்தியக்கலாநிதி அருளானந்தம் ,பேராசிரியர் க.கந்தசாமி ஆகியோருடன் விரிவுரையாளர் இளம்பிறையன்,பயிற்றுவிப்பாளர் ஜெயக்கிருஸ்ணா, சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன்,ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு விழா நாயகனை பாராட்டி வாழ்த்தவுள்ளனர். குறித்த நிகழ்வு குறுகிய கால ஏற்பாடு என்பதால் சகலரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தென்மராட்சி இலக்கிய அணியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# 121 பேரின் இறப்பு சாதாரண இறப்பல்ல அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்

(வாஸ் கூஞ்ஞ)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இரண்டாயிரம் நாட்களாக தங்கள் உறவுகளுக்காக தொடந்து மேற்கொண்டு வரும் அகிம்சை போராட்டத்தில் இதில் ஈடுபட்டு வந்த பெற்றோர் 121 பேர் நோய்வாய்பட்டும் முதுமை அடைந்த நிலையிலும் இறந்துள்ளனர். இவ் இறப்பு சாதாரண இறப்பல்ல இதுவும் ஒரு கொலையாகும். இதற்கு அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் விநோதராதலிங்கம் (விநோ) இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சிம்மாசன உரை சம்பந்தமாக மூன்றாவது நாட்களாக பாராளுமன்ற அமர்வின்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் விநோதராதலிங்கம் (விநோ) வெள்ளிக்கிழமை (12.08.2022) பாராளுமன்றில் ஆற்றிய உரையில், ஜனாதிபதியின் சென்ற சிம்மாசன உரை சம்பந்தமாக மூன்றாவது நாளில் நாங்கள் கலந்து கொண்டிருக்கின்றோம். எனக்கு முன்பு உரையாற்றிய பிரசன்ன ரணதுங்க அவர்கள் சர்வ கட்சி அரசியலின் தேவைகளைப்பற்றி கூறியிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நாங்கள் நாட்டின் இன்றைய அரசியல் ரீதியாக பொருளாதார ரீதியாக நாடு இன்று இருக்கும் இந்த நெருக்கடியான இந்த நேரத்தில் சர்வ கட்சி அரசியல் தேவையைப்பற்றி நாங்கள் புரிந்து கொள்ளுகின்றோம். உணர்ந்து கொள்ளுகின்றோம்.

அனைத்து கட்சிகளும் இணைந்து அப்படி ஒரு அரசாங்கம் உருவாகுமானால் நாங்கள் நிபந்தனைகளோடு இந்த அரசுடன் நாட்டு மக்களின் நலன் கருதி தற்பொழுதுள்ள சூழலை கருதி இணைந்து செயல்படுவதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால் கடந்த காலங்களில் ஆழும்கட்சிகளும் எதிர் கட்சிகளும் அப்பப்ப தமிழ் மக்களை ஏமாற்றியதும் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஏமாற்றியதை நல்ல அனுபவமாகக் கொண்டு நல்ல பாடமாகக் கொண்டு எழுந்தமானமாக ஏமாற்றுத் தன்மையாக உங்களுக்கு நாங்கள் ஆதரவு தருவதற்கு தயாரில்லை.

ஏனென்றால் யுத்தம் முடிந்த பின்பு ஐநா ஆணையாளரிடம் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் தமிழ் மக்களுக்க ஆரம்பிக்கப்பட்ட ஒரு தீர்வாக மாகாண சபை ஊடாக பலப்படுத்துவதற்கு 13 பிளஸ் பிளஸ் என தெரிவித்துக் கொண்டிருந்தவர்கள் ஆனால் எந்த நடவடிக்கை மூலமும் தமிழ் மக்களுக்கு தீர்வு முயற்சி எடுக்காமல் விட்டவர்கள். இது எங்களுக்கு நல்ல அனுபவம். இதேபோன்றுதான் நான்கரை வருடங்கள் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு பேச்சுவார்த்தை மூலமாக தமிழ் மக்களுக்கு நல்ல அரசியல் தீர்வினை பெறுவதற்காக எங்கள் கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவை ஒவ்வொரு முறையும் ஏமாற்றி அவரை நம்ப வைத்து எங்கள் 16 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை இன்றைய ஜனாதிபதியும் அப்பொழுது இருந்த ஜனாதிபதி மைத்திலி அவர்களும் இணைந்து ஏமாற்றிய வரலாறு இருக்கின்றது.

இவற்றையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு இந்த சர்வகட்சி அரசாங்கத்துக்குக்கு இந்த நேரத்தில் ஆதரவு தர நாங்கள் தயாரில்லை.

ஆழும் கட்சி ஒரு தீர்வை தந்தால் எதிர் கட்சி அதை எதிர்க்கின்றார்கள் எதிர்கட்சி ஒரு தீர்வை தருவதற்கு தயாராக இருந்தால் ஆழும் கட்சியினர் அதை இந்த பாராளுமன்றத்தில் எரிப்பதற்கும் தயாராக இருந்த வரலாறு உண்டு. இதை நாங்கள் உண்ணிப்பாக பார்த்து கொண்டு இருப்பதுடன் எமது மக்களுக்கு நன்மை பயக்கும் விடயமாக இருந்தால் மட்டுமே நாம் ஆதரவு வழங்க தயாராக இருக்கின்றோம். கடந்த நல்ல ஆட்சி காலத்தில் எங்களுக்கு 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால் திட்டமிட்டு எங்களிடமிருந்தும் எங்கள் மக்களிடமிருந்தும் அந்நியப்படுத்தி பிரித்தெடுத்து சகுனி விளையாட்டு விளையாடினீர்கள். 2009 இல் யுத்தம் நிறைவுற்ற காலத்திலிருந்து எங்கள் மக்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்று கேட்டவாறு 2000 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கு ஆகிய எட்டு மாவட்டங்களிலும் இந்த 2000 போராட்ட நாளை கிளிநொச்சியில் ஒரு போராட்ட நாளாக முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

நாங்கள் ஒரு சுலோகத்தை தூக்கி விட்டால் புலிகள் என்ற நாமத்தை சூட்டி விடுவீர்கள். இதுதான் இங்கு காலாகாலமாக நடைபெறுகின்றது. சிறுபான்மையினர் ஒடுக்கப்படுவது இங்குமட்டுமல்ல மாறாக வடக்கு கிழக்கு எல்லா பகுதியிலும் இதுதான நடக்கின்றது. பாராமன்றத்திலும் சிறுபான்மையினருக்கு கருத்து சுதந்திரம் பேச்சு சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இந்த 2000 ம் நாட்கள் போராட்டத்தில் 121 பெற்றோரை இழந்த நிலையிலே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த போராட்டத்தில் இந்த பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாங்கள் அவர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். இந்த 121 பெற்றோரின் இறப்பை நாம் சாதாரணமாக எண்ணிவிடக் கூடாது இவர்களும் கொல்லப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். காரணம் இவர்கள் அகிம்சை வழி போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆவர். இவர்களின் மரணங்களுக்கு இந்த அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும். காலி போராட்டம் அரசியல் கலந்தமையாலேயே அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# கௌரவிப்பு நிகழ்வு



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இக்பால் சனசமூக நிலையத்தின் 60 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு “வாழும் போதே வாழ்த்துவோம்” கௌரவிப்பு நிகழ்வு கடந்த (9) ஆம் திகதி இடம்பெற்றது. இக்பால் சனசமூக நிலைய தலைவர் ஏ.எல்.லியாப்தீன் தலைமையில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில், வாழைச்சேனை இக்பால் சனசமூக நிலைய நிர்வாக எல்லைக்குட்பட்ட கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், விளையாட்டு, கலைத்துறை செயற்பாட்டாளர்கள், சுகாதார, பாதுகாப்பு, சுயதொழில் துறைசார்ந்த மூத்த, இளம் ஆளுமைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், பிரதேசத்தின் மேம்பாட்டுக்காக சேவையாற்றி வரும் கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர், செயலாளர், சனசமூ அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் இக்பால் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளால் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம்.தையூப், வாழைச்சேனைபிரதேச சபையின் செயலாளர் திரு எஸ்.நவநீதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஹாரூன், காவத்தமுனை மில்லத் வித்தியாலய அதிபர் எச்.எம்.இஸ்மாயில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் என்.சஹாப்தீன், பி.எம்.இஸ்மாயில் ஜே.பி, கே.சுபைர் ஆசிரியர், நூலகர் கே.பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால்

# நூல்கள் கையளிப்பும், வெளியீடும்

**பைஷல் இஸ்மாயில் -**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்ட 4 நூல்கள் கையளிப்பும், அதன் வெளியீட்டு விழாவும் நாளை காலை 10 மணிக்கு திருகோணமலை நகரசபை நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.முனாஸீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அம்மாவுக்கு பிடித்த கனி என்ற சிறுவர் பாடல்கள் நூலாசிரியர் கலாபூசனம் பி.கனகரத்தினம், கொட்டியாரப்பற்று வன்னிபங்கள் வரலாறு என்ற நூல் ஆசிரியர் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ், நவீன சீதை என்ற சிறுவர் கதை நூலாசிரியர் கவிச்சுடர் (திருமதி) க.சிவரமணி, கடலோரப்பாதை என்ற சிறுவர் கதை நூலாசிரியர் ஏ.எம்.முகைதீன் ஆகியோர்களினால் எழுதப்பட்ட நூல்களே இவ்விழாவில் வெளியீடு செய்யப்பட்டு கையளித்து வைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.







வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல் விழா தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையன்று மாணிக்க கங்கையில் இடம்பெற்ற போது. **(படங்கள் காரைதீவு நிருபர் சகா)**

## பெப்ரல் அமைப்பினால் ‘மாற்றத்துக்கான பாதை’

# 100 பெண்களுக்கான 4 நாள் பயிற்சி







**(வவுணதீவு நிருபர் )**

பெப்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை எனும் பயிற்சி திட்டத்தின் கீழ் அரசியல் நிருவாகங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு நாள் தெரிவு செய்யப்பட்டு அதில்கள விஜயமாக மண்முனை மேற்கு பிரதேச சபைக்கு வெள்ளிக்கிழமை (12) பிற்பகல் வருகை தந்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட இலங்கையின் சகல பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 75 பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், சிவில் சமூக அமைப்புக்களின் 25 பெண்களும் இந்த நான்கு நாள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

நாட்டின் அரசியலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க ஒரு சிறப்புத் திட்டமாக பெப்ரல் அமைப்பினால். ‘மாற்றத்துக்கான பாதை’ என்று பெயரிடப்பட்டு இத்திட்டத்தில், 100 பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பில் இடம்பெறும் பயிற்சியில் 100 பெண்கள் இரு அணிகளாக பிரிக்கப்பட்டு தனியார் விடுதிகளிலும் பாசிக்குடாவிலும் பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றன. மண்முனை மேற்கு பிரதேச சபைக்காள வருகையின் போது தவிசாளர் எஸ். சண்முகராஜா தலைமையிலான சபை உறுப்பினர்கள், ஊழியர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றது. பின்தங்கிய பிரதேசத்திலிருந்து வளப்பற்றாக் குறையுடன் இயங்கிவரும் மண்முனை மேற்கு பிரதேச சபை கடந்த காலங்களில் ஏழாம் நிலையில் இருந்து தற்போது மாவட்டத்தில் முதலாம் நிலைக்கு வந்துள்ளதையிட்டு பெப்ரல் அமைப்பினரால் பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், ஊழியர்கள் பாராட்டப்பட்டனர்.

இந்நிகழ்வில் தவிசாளர் எஸ். சண்முகராஜா, உப தவிசாளர் பி.செல்லத்துரை, பெப்ரல் அமைப்பின் திட்ட இணைப்பாளர் சொர்ணலிங்கம் மற்றும் பெப்ரல் அமைப்பின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# புதிய சமுர்த்தி வங்கி கட்டிட அடிக்கல் நடும் நிகழ்வு





**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டிட நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு முள்ளிப்பொத்தானையில் இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இன்று (13) காலை இடம் பெற்ற இவ் அடிக்கல் நடும் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். மத அனுஷ்டானத்துடன் இடம் பெற்ற கட்டிட நிர்மான அங்குரார்ப்பண வைபவமானது சுப நேரப்படி காலை 10.22 க்கு அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஊடான நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 90 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இவ் சமுர்த்தி வங்கிக் கட்டிடமானது திருகோணமலை கண்டி பிரதான வீதி முள்ளிப்பொத்தானையில் உள்ள வங்கிக்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது

குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார, மாவட்ட சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் எஸ்.சுதீஸ்னர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் கே.நபீல், தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமைமாளர் ஏ.ஆர்.எம்.சித்திக்,வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹஸ்புல்லா உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# கோட்டபாய ராஜபக்ஷ தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கான விளைவினை அனுபவிக்கின்றார்

**பாறுக் ஷிஹான்**

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தமிழ் மக்களின் இனப்படுகொலையை அரங்கேற்றிய முக்கிய காரண கர்த்தாவாக இருந்தமையினால் சொந்த நாட்டில் கால் பதிக்க முடியாமல் சிங்கள மக்களினால் துரத்தி அடிக்கப்பட்டு இன்று ஒவ்வொரு நாடாக தத்தளித்து திரிகின்றவர்களாக இருக்கின்றார்கள்.எந்தவொரு நாட்டிலும் அவருக்கான புகழிடம் மறுக்கப்படுகின்ற நிலைமை தொடர்கின்றது.இனப்படுகொலைக்கான விளைவினை இன்று அவர் அனுபவிக்கின்றார் என அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(12) மாலை அகம் மனிதபிமான வள நிலையம் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் ஏற்பாட்டில் வீரமுனை பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, படுகொலைகளுக்கு காரணமானவர்கள் இந்த நாட்டில் இருந்து தப்பி ஓடி வருகின்றார்கள்.முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ கூட நாட்டில் கால் பதிக்க முடியாமல் சிங்கள மக்களினால் துரத்தி அடிக்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.இன்று ஒவ்வொரு நாடாக தத்தளித்து திரிகின்றவர்களாக இருக்கின்றார்கள்.



எந்தவொரு நாட்டிலும் அவருக்கான புகழிடம் மறுக்கப்படுகின்ற நிலைமை தொடர்கின்றது.இதற்கெல்லாம் காரணம் எமது தமிழ் மக்களின் இனப்படுகொலையை அரங்கேற்றிய முக்கிய காரண கர்த்தாவாக இருந்தமையினால் ஆகும்.அதற்கான விளைவினை இன்று அவர் அனுபவிக்கின்றார்.அன்று முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதனால் தான் இன்று சிங்கள மக்களும் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். காலிமுகத் திடலில் இன்று சடலங்கள் கரையொதுங்கும் நிலை காணப்படுகின்றது. சிங்கள மக்கள் கூட இன்று பயந்து நடுங்குகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். அன்று தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தை தற்போது சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை இந்த நாட்டில் உருவாகியுள்ளது. எனவே தான் தமிழையும் தமிழ் தேசியத்தையும் என்றும் நாம் நேசிக்கின்றவர்களாகவே இருக்கின்றோம் என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர். கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனையில் அனுஷ்டிக்கப்பட்டதுடன் வீரமுனையில் ஆலயத்திற்குள் புகுந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 55 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம். மன்னிக்கவும் மாட்டோம்.எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்பும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நினைவேந்தலை நடத்தி வருகின்றோம் என கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பல் உணவு அங்காடிக்கான அடிக்கல் நட்டு வைப்பு




உல்லாசப் பிரயாண துறையை ஊக்குவிக்கும் வகையிலும், மட்டக்களப்பின் பாரம்பரிய உணவுகளை சந்தைப்படுத்திக்கொள்ளும் நோக்கிலுமாக உலக வங்கியின் நிதி உதவியில் மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள பல் உணவு அங்காடிக்கான (ஆரடவை கழழன உநவெநச) அடிக்கல் நடும் நிகழ்வானது மட்டக்களப்பு மாநகர சபையின் 10 ஆம் வட்டார உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நேற்று(12) இடம்பெற்றது.

நாட்டின் தற்கால பொருளாதார நெருக்கடி நிலமைகளை கருத்திற்கொண்டு உல்லாச பயணிகளை கவரும் விதத்தில் மட்டக்களப்பின் தனித்துவமான பாரம்பரிய உணவுகளை சந்தைப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக மட்டக்களப்பு மாநகர சபையானது, உலக வங்கியின் "உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின்" ஊடாக சுமார் 6 மில்லியன் ரூபாய் செலவில் பல் உணவு அங்காடியானது நிர்மாணிக்கப்படவுள்ளது.

கொழும்பு நகரில் அமைந்துள்ள "கைலாசா உணவகத்தினை" ஒத்ததாக பல வகையான உணவுகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் மேற்படி பல் உணவு அங்காடியானது அமையப்பெறவுள்ளதாகவும், இதன் ஊடாக உல்லாச பிரயாணிகளின் வருகை அதிகரிக்கும் அதேவேளை உள்ளூர் இளைஞர்களுக்கும் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்க கூடியதாகவும் இருக்கும் என இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

மேலும் உணவகம் அமையப்பெறவுள்ள இடமானது குப்பை குழங்கள் நிறைந்து காடு மண்டி காணப்படுவதாகவும், இரவு வேளைகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் பிரதேச மக்கள் முறையிட்டு வருகின்றனர். எனவே இத் திட்டத்தின் ஊடாக இவ்வாறான செயற்பாடுகள் தடுக்கப்படுவதோடு, நகர் பகுதியும் இரவு வேளைகளிலும் இயங்கு நிலையில் இருக்கும் எனவும் தான் எதிர்பார்ப்பதாகவும் இதற்கு போது மக்களும் தமது ஒத்துழைப்புக்களை மாநகர சபைக்கு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், மாநகர சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஆர். சுதர்சன் உள்ளிட்டவர்களுடன் பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்






**க.ருத்திரன்**

'இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' என்ற தொணிப் பொருளில் கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் இடம்பெற்றது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் நெறிப்படுத்துனர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாட்கள் செயல் முனைவு போராட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் 13 நாள் செயல் முனைவான போராட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பெரிய புல்லுமலையில் இன்று(13) நடைபெற்றது. இன்று காலை பெரிய புல்லுமலை பிரதான வீதியில் ஒன்று கூடிய மக்கள் கையில் கோரிக்கை அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

' நடமாடுவது எங்கள் சுதந்திரம் ஒன்று கூடுவது எங்கள சுதந்திரம்', 'பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை', 'வேண்டும் வேண்டும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்' என்பன போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சிவில் அமைப்புக்கள் மற்றும் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் பொருட்டு ஊடகவியலார்களிடம் கையளிக்கப்பட்டது

# மாவடிச்சேனை றியல் விளையாட்டுக்கழகத்தின் 15ம் ஆண்டுப்பூர்த்தி ஒன்றுகூடல்



**ந.குகதர்சன்**

மாவடிச்சேனை றியல் விளையாட்டுக் கழகத்தின் 15ம் ஆண்டுப்பூர்த்தியும் முன்னிட்டு ஒன்றுகூடலும் களப்பயணமும் புதிய நிருவாகத் தெரிவும் நேற்று 12.08.2022ம் திகதி வெள்ளிக்கிழமை பொத்தானையில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் ஏ.எல்.அப்துல் ஹமீட் ஏற்பாட்டில் கழகத்தின் ஆலோசகரும் கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான கே.எல்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிறப்பு அழைப்பாளர்களாக சட்டத்தரணிகளான எம்.எம்.ராசீக், ஹபீப் றிபான், முன்னாள பிரதேச சபை உறுப்பினர் அல் பத்தாஹ் மற்றும் முன்னாள் தலைவர்கள், கழக உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். கழக்த்தின் புதிய தலைவராக எம்.அஜ்மீர் தெரிவு செய்யப்பட்டதுடன், நிருவாகிகள், உறுப்பினர்கள், விளையாட்டுப்பிரிவுத் தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். நிகழ்வின் சிறப்பம்சமாக கழகத்தின் வளர்ச்சிக்கு அயராதுழைத்த தலைவர்கள், முக்கியஸ்தரகள் கௌரவிக்கப்பட்டனர்.

# தனங்களப்பில் 50பேருக்கு மூக்குக்கண்ணாடி



**த.சுபேசன்**

லண்டனில் வசித்து வரும் ஆஷனா சூரியகுமார் தனது 17வது பிறந்தநாளை முன்னிட்டு அண்மையில் சாவகச்சேரி–தனங்கிளப்பு பகுதியில் உள்ள தேவைப்பாடுடைய 50பேருக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகளை வழங்கி வைத்துள்ளார். சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் நிமலரோகனின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் தீபா கண்ணாடியகம் ஊடாக குறித்த உதவித்திட்டத்தை வழங்கி வைத்திருந்தார்.இதன்போது கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு–குறைபாடுடையவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடற்கரை சிரமதான நிகழ்வும், மரம் நடுகையும்




**நூருல் /ஹுதா உமர்**

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு "இளைஞர் கழகங்களின் மூலமாக தன்னார்வ வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்" என்பதை கருப்பொருளாக கொண்ட கடற்கரை சிரமதானமானது சாய்ந்தமருது கடற்கரை பூங்காக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றதுடன் மரம் நடுகை நிகழ்வானது சாய்ந்தமருது சதுக்கத்திலும், அதற்கு அண்மித்த பகுதியிலும், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்திலும் ளுடுலுஊ இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

SLYC இளைஞர் கழகத்தின் தலைவர் எஸ்.ஏ.எம். அஸ்லமின் ஒழுங்குபடுத்துதலில் அக்கழகத்தின் உறுப்பினர்களின் ஆதரவுடன் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரியும், இளைஞர் சேவை அதிகாரியுமான எம்.ட .எம். ஹாரூன், சாய்ந்தமருது பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஷமீலுள் இலாஹி, பிரதேச இளைஞர், யுவதிகள், மீனவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி மன்றங்களை உடனே கலையுங்கள்

## அரசிடம் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர் வேண்டுகோள்




**நூருல் /ஹுதா உமர்**

நாட்டில் பல சபைகள் நகர சபைகளாகவும், மாநகர சபைகளாகவும் தரமுயர்த்தப்பட்டும் சாய்ந்தமருது நகர சபை விடயம் மட்டும் அநாதையாக்கப்பட்டுள்ளது. தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுடன் சேர்ந்து சாய்ந்தமருது மக்களை ஏமாற்றிய கல்முனை மாநகர சபை உறுப்பினர்களாக உள்ள தோடம்பழக் குழுவினருக்கு தக்க பாடம் புகட்ட சாய்ந்தமருது மக்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் இந்த சபைகளை கலைப்பதன் மூலம் அமையும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ/க்கு மிகக் குறைவாகவும் தேசிய காங்கிரஸ/க்கு அதிகளவிலும் வாக்களித்த சாய்ந்தமருது மக்களை தே.கா தலைவர் அதாவுல்லா எம்.பி உச்சளவில் ஏமாற்றிவிட்டதாகவும் யஹியாகான் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

மு. கா தலைமை சாய்ந்தமருது நகர சபை விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. சாய்ந்தமருது மக்களின் கனவை நனவாக்குவதில் முஸ்லிம் காங்கிரஸ் உறுதியாகவுள்ளது. தே.கா தலைவர் சாய்ந்தமருது மக்கள் வழங்கிய ஆணைக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். இது விடயத்தில் அவர் ஏதாவது முயற்சிகள் செய்வாராயின் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். அதை விடுத்து சபை பெற்றுத்தருவேன் என்று கூறி சாய்ந்தமருது மக்களை ஏமாற்ற இன்னும் முயற்சிக்கக் கூடாது.

சாய்ந்தமருதை சேர்ந்தவன் என்ற ரீதியில் நான் அடிக்கடி எங்கள் தலைவர் ரவூப் ஹக்கீமை நகர சபை விடயமாக பேசி வருகின்றேன். அதேவேளை நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.